*7*

# ஆராதனையில் இசைக்கருவி ஒன்றை பயன்படுத்துவதற்கான விவாதங்கள்

*கிறிஸ்தவ ஆராதனையில் இசைக்கருவிகள் பயன்படுத்துதலைத் தற்காக்க ஏற்படுத்தப்பட்ட குறிப்பிட்ட விவாதங்களை ஒரு முறையான வகையில் நாம் கண்ணோக்குவோம். மேலும் நாம், ஒவ்வொரு விவாதத்திற்கும் ஏற்புடைய பதில்களையும் ஆராய்ந்து பார்ப்போம்.*

## "சபைக்குழுவினராகப் பாடுதல் புதிய ஏற்பாட்டில் அங்கீகரிக்கப்படவில்லை"

*பாடுதல் என்பது புதிய ஏற்பாட்டு ஆராதனையின் பாகமாக இருப்பதில்லை என்று சிலர் மனநிறைவு அடைகின்றனர், மற்றும் இதன் விளைவாக, வாய்ப்பாட்டை ஆராதனையின் பாகமாக வலியுறுத்துபவர்கள் அதை அவ்வாறு கண்ணோக்குவதில் தவறாக இருக்கின்றனர் என்றும் அவர்கள் கூறுகின்றனர். இருப்பினும், சபைக்குழுமத்தில் தேவனைத் துதித்தல் (humnesō) பற்றிப் பேசுகிற எபிரெயர் 2:12ம் வசனம், அதை அங்கீகரிக்கும் வகையில் சங்கீதம் 22:22 [21:23]ஐ மேற்கோள் காண்பிக்கிறது. ஒன்று கொரிந்தியர், எபேசியர் மற்றும் கொலோசெயர் ஆகிய நிருபங்கள் யாவும் கர்த்தருடைய சபைக்கு எழுதப்பட்டவைகளாக இருந்தன. ஒன்று கொரிந்தியர் 14ம் அதிகாரம், சபைக்குழுமத்தில் நடைபெறுவது என்ன என்று கலந்துரையாடுகிறது. எபேசியருக்கு எழுதிய நிருபம் ஒருவருக்கொருவர் போதித்து புத்திசொல்லு வதைப் பற்றிப் பேசுகிறது. 1 கொரிந்தியர் 14ம் அதிகாரத்தில், சபை ஒன்று கூடி வருகிறபோது என்ன நடக்கிறது என்பது பற்றிய கலந்துரையாடலில், பாடுதலைப் பற்றிப் பவுல் குறிப்பிடுகிறார். எபேசியர் 5:19 மற்றும் கொலோசெயர் 3:16 ஆகிய வசனங்களில், "ஒருவருக்கொருவர்" (heautois) என்று ஒன்றுக்குப் பதில் இன்னொன்று என்னும் வகையிலான பிரதிப்பெயர்ச்சொல், குறைந்த பட்சம் இருநபர்கள் (காண்க மத்தேயு 18:20) என்பதன் விதிமுறை அர்த்தத்தைக் கொண்டுள்ளது ஆனால் இதற்கு மேல் எல்லை என்று எதுவும் இருப்பதில்லை.[1]*

*பாடுதல் என்பது சபைக்குழுமத்தின் ஆராதனையில் பாகமாக இருப்பதில்லை என்ற விவாதமானது, தர்க்கப் பொருத்தம் இல்லாததாகவும் தன்னைத்தானே குற்றம்சாட்டிக் கொள்வதாகவும் உள்ளது, ஏனெனில் அதை முன்னிறுத்துபவர்கள் தங்கள் ஆராதனையில் இசைக்கருவிகளுடனான பாடலை நடைமுறைப் படுத்துகின்றனர். பாடுதல் என்பது அங்கீகரிக்கப்படவில்லை என்றால், அதை இசைக்கருவியுடனோ அல்லது இசைக்கருவி இன்றியோ,*

ஆராதனையில் உள்ளடக்குதல் என்பது தவறாக இருக்கும். எனவே இந்த விவாதத்தைப் பயன்படுத்துதல் என்பது, ஆராதிப்பவர்கள் தங்கள் சொந்த விதிகளை ஏற்படுத்துகின்றனர் என்று ஒப்புக்கொள்வதாக இருக்கும். மறுப்பவர்கள் தங்கள் மனச்சாட்சிகளை மீறும்படியோ அல்லது வேறு எங்காவது ஆராதிக்கும்படியோ நிர்ப்பந்திக்கப்படுவார்கள்.

மோசேயின் நியாயப்பிரமாணம் எக்காளம் ஊதுதலை அங்கீகரித்தது (எண்ணாகமம் 29:1), மற்றும் சங்கீதங்கள் அந்தச் செயலை "இது இஸ்ரவேலுக்குப் பிரமாணமும், யாக்கோபின் தேவன் விதித்த நியாயமுமாயிருக்கிறது" என்று பேசுகின்றன (சங்கீதம் 81:3, 4). சங்கீதங்கள் சபையைக் கட்டுவிக்கும் வடிவமைப்பாக இருந்தன என்றால், சபைக்குழுமங்களில் இசைக்கருவிகளும் வாய்ப்பாட்டும் ஆகிய இரண்டுமே அந்த வடிவமைப்பை மீறுபவைகளாக இருக்கும். அமாவாசையன்றோ, பவுர்ணமியன்றோ அல்லது பண்டிகை நாட்களிலோ எக்காளங்கள் (shophar) ஊதப்படவில்லை.

இரண்டாயிரம் ஆண்டுகளாகக் கிறிஸ்தவர்கள் பாடலில் தேவனைத் துதித்துக் கொண்டுள்ளனர். முதல் நூற்றாண்டில் இக்னேஷியஸ் என்பவர், "ஒரேகுரலில் ஒருமைப்பாட்டுடன் பாடுதல்" பற்றி ஒப்புவமையாகப் பேசினார்.[2] இரண்டாம் நூற்றாண்டில் பிளீனி என்பவர், கிறிஸ்துவைத் தேவன் என்ற வகையில் அவருக்குக் கிறிஸ்தவர்கள் கீர்த்தனைகளைப் பாடினர் என்று கூறினார்.[3] தேவனுக்கு ஆராதனை செய்தலில் பாடுதல் என்பது ஒருபாகம் என்ற வகையில் அது அமெரிக்க மீளக்கட்டுவித்தல் இயக்கத்தின் உறுப்பினர்களிடத்தில் தோன்றியதல்ல.

## "இசைக்கருவிகள் சங்கீதங்களிலும் வெளிப்படுத்தின விசேஷத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளன"

**சங்கீதங்களில்**

சிலர், சங்கீதங்களில் இசைக்கருவிகளின் பயன்பாடு குறிப்பிடப்பட்டுள்ளதென்பது, கிறிஸ்தவ ஆராதனையில் அவற்றின் பயன்பாட்டை நியாயப்படுத்துகின்றன என்று வலியுறுத்துகின்றனர். இது, சங்கீதங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொன்றையும் செய்தலை நியாயப்படுத்துகிறதா, அல்லது ஒருவர் புதிய ஏற்பாட்டு ஆராதனையில் தழுவிக்கொள்ள விரும்புகின்ற நடைமுறைகளை மாத்திரம் நியாயப்படுத்துகிறதா? சங்கீதம் 149:6, 7 வசனங்கள் இசைக்கருவியைக் குறிப்பிடுகின்றன. அதை நாம், ஆராதனையில் இசைக்கருவிகளைப் பயன்படுத்துவதற்கான அதிகாரத்துவமாகப் பயன்படுத்தினால், நாம் பரிசுத்த தேவாலயத்தை நோக்கிப் பணிந்துகொள்ளவும் வேண்டுமல்லவா? (சங்கீதம் 5:7; 138:2) மற்றும் தேவாலயத்தில் கர்த்தரிடம் விசாரிக்கவும் வேண்டுமல்லவா (சங்கீதம் 27:4; 43:4)? இசைக்கருவிகள் பயன்பாட்டைப் பற்றிச் சங்கீதம் தெளிவாக உள்ளது; புதிய ஏற்பாடு அவ்வாறு தெளிவாக இருப்பதில்லை! தூபவர்க்கம் என்பது பரிசுத்தவான்களின் ஜெபத்தைக் குறிக்கிறது என்று ஒருவர் வாதிடலாம், ஆனால் இது பழைய ஏற்பாட்டில் இருந்து வந்த உருவகம் என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும். நியாயப்பிரமாணத்தின் கீழ்க் கட்டளையிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட

அது, ஒரு உருவகக் கருத்துணர்வைக் கொண்டுள்ளது என்ற உண்மையானது, நேரடியாகத் தூபவர்க்கத்தைப் பயன்படுத்துதலைத் தடைசெய்யவில்லை. இருப்பினும், புதிய ஏற்பாட்டு ஆராதனையில் தூபவர்க்கம் என்பது ஒரு பாகமாக இருக்கவில்லை.

ஒருவர், "சங்கீதங்களில் இருந்து வார்த்தைகளை நாம் பாடும்போது, நாம் நடைமுறைப்படுத்தக் கூடாத சிலவற்றை நாம் பாடலாமா?" என்று கேட்கலாம். தாராளமாகப் பாடலாம். சங்கீதம் 66:13-15ஐ ஆழ்ந்து சிந்தியுங்கள்:

> *சர்வாங்க தகனபலிகளோடே உமது ஆலயத்திற்குள் பிரவேசிப்பேன்; என் இக்கட்டில் நான் என் உதடுகளைத் திறந்து, என் வாயினால் சொல்லிய என் பொருத்தனைகளை உமக்குச் செலுத்துவேன். ஆட்டுக்கடாக்களின் நிணப்புகையுடனே கொழுமையானவைகளை உமக்குத் தகனபலியாக இடுவேன்; காளைகளையும் செம்மறியாட்டுக் கடாக்களையும் உமக்குப் பலியிடுவேன்.*

இந்த நடைமுறைகள் புதிய ஏற்பாட்டு ஆராதனையில் உள்ளடக்கப்பட முடியுமா? சங்கீதங்களில் குறிப்பிடப் பட்டுள்ள பல செயல்கள், அவர்களின் நாட்களுக்கு ஏற்றவைகளாக இருந்தபோதிலும்கூட, அவைகள் புதிய ஏற்பாட்டு ஆராதனைக்கு இசைவிணக்கமானவைகளாக இருப்பதில்லை. கிறிஸ்துவின் மரணத்தில், நியாயப்பிரமாணமும் அவற்றின் முறைமைகள் யாவும் நிறைவேற்றப்பட்டு ஒழிக்கப்பட்டு விட்டன (ரோமர் 7:4; கொலோசெயர் 2:14; எபிரெயர் 10:8-10). இருப்பினும், பழைய ஏற்பாட்டு உதாரணங்களில் இருந்து நாம் இன்னும் கற்றுக்கொள்ள முடியும் (காண்க கலாத்தியர் 3:24, 25). முற்பிதாக்கள் மற்றும் மோசேயின் காலத்தின் நடைமுறைகளை சபையின் ஆராதனைக்குள் கொண்டு வராமலேயே, கடந்த காலங்களில் தேவன் செய்தவற்றைப் பற்றி நாம் பாடமுடியும்.

ஆராதனையில் தேவன் விதித்துள்ளவற்றில் ஏற்பட்ட மாற்றம் பல விஷயங்களினால் விவரிக்கப்பட முடியும். பழைய ஏற்பாட்டு ஆராதனையானது கூடாரத்திலும் பின்பு தேவாலயத்திலும் நடைபெற்றது. நடபடிகள் 8:27ல் எத்தியோப்பிய மந்திரி, ஆராதிக்க எருசலேமுக்குச் சென்றார். அவர், ஆராதனையானது கெரிசீம் மலையிலோ அல்லது எருசலேமிலோ மாத்திரம் இருக்காது என்பதை இன்னும் கேள்விப்பட்டு இருக்கவில்லை (யோவான் 4:21ஐக் காணவும்). சுவிசேஷம் என்பது, கர்த்தரை எங்கும் தொழுதுகொள்ளுகிறவர்களுக்கு ஆனதாக உள்ளது (1 கொரிந்தியர் 1:2). கிறிஸ்தவர்கள் எல்லா இடங்களிலும் ஜெபிக்க முடியும் (1 தீமோத்தேயு 2:8). சாலொமோன் மண்டபம் (நடபடிகள் 3:11; 5:12), இல்லங்கள் (நடபடிகள் 12:12), திறன்னு என்பவனுடைய வித்தியாசாலை (நடபடிகள் 19:9) மற்றும் துரோவாவில் இருந்த மேல்வீடு (நடபடிகள் 20:7-9) ஆகியவை கிறிஸ்தவர்கள் ஒன்றுகூடி ஆராதித்த இடங்களாக இருந்தன. இந்த இடங்கள் எதிலும் இசைக்கருவி பயன்படுத்தப் பட்டதற்கான ஆதாரம் எதையும் நாம் கண்டறிவதில்லை.

மத்தேயு சுவிசேஷத்தில் (1:3) பட்டியலிடப்பட்டுள்ள, இயேசுவின் முன்னோர்களில் உள்ள ஐந்து பெண்களில் ஒருத்தியான தாமார் என்பவளின் வரலாற்றில் காணப்படுகிறபடி (ஆதியாகமம் 38:1-11), நெருங்கிய

*உறவினர்களுக்குள் திருமணத்தின் மூலம் மீட்டு ஆதரித்தல் என்ற நடைமுறையானது மோசேயின் காலத்திற்கு முன்பு, கடமையாக இருந்தது. அந்த வரலாறு மத்தேயு 22:23-32ல் இயேசுவுக்கு வலைவிரிக்கும்படி சதுசேயர்கள் கேட்ட கேள்விக்கு ஆதாரமாக இருந்தது. மத்தேயு சுவிசேஷத்தில் சதுசேயர்களின் கேள்வியைத் தவிர, இந்த நடைமுறையைப் புதிய ஏற்பாடு மறைமுகமாகவே உரைக்கிறது. மோசேயின் நியாயப்பிரமாணம் இந்தப் பழைய வழக்கத்தை அமுல்படுத்தியது (உபாகமம் 25:5-10), ஆனால்* Levirate *திருமணம் என்பது புதிய ஏற்பாட்டில் கட்டளை இடப்படவும் இல்லை, அது தடைசெய்யப்படவும் இல்லை. இவ்வகையான திருமணங்கள் நைஜீரியா நாட்டில் இன்னமும் கடைப்பிடிக்கப்படுவதாக எனக்குக் கூறப்பட்டது, ஆனால் புதிய உடன்படிக்கையில் இது செய்யப்படும்படி கேட்கப்படுவதில்லை.*

*சீர்திருத்தத்தின் காலங்களில் சில பிரிவினர், பன்மைத் திருமணங்களில் தாங்கள் முற்பிதாக்களின் உதாரணத்தைப் பின்பற்ற வேண்டும் என்று நினைத்தனர். மார்மன் குழுவினர், உட்டா என்பது அமெரிக்க மாநிலம் ஆகும் வரையில் இதை நடைமுறைப்படுத்தினர், மற்றும் சில பிரிவினர் இன்றளவும் இதைச் செய்து வருகின்றனர். ஒரு மனிதர் இவ்வாறான நடைமுறையில் ஈடுபட்டுள்ள மிகமேன்மையான மக்களைச் சுட்டிக் காண்பித்ததன் மூலம் இதை நியாயப்படுத்த முயற்சி செய்தார். அந்த விவாதமானது திருமணத்தை விலக்கி வைத்தலுக்கும் சம அளவில் பயன்படுத்தப்படக்கூடும்.*

*சிலருடைய உரிமைகோருதல்களுக்கு நேரெதிராக, எபிரெயர் 1:8, 9 வசனப்பகுதி, ஆராதனைக்கான நெறிமுறைகளையோ அல்லது உதாரணங்களையோ தருவதில்லை. இவ்வசனப்பகுதி சங்கீதம் 45:6ல் இருந்து வார்த்தைகளை மேற்கோள் காண்பித்து அதைக் கிறிஸ்துவின் மேசியாத்துவத் தீர்க்கதரிசனத்திற்கு நடைமுறைப்படுத்துகிறது. இந்த சங்கீதம் கம்பி இசைக்கருவிகளைப் பற்றிப் பேசுகிறது, ஆனால் எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் சங்கீதத்தின் அப்பகுதியை மேற்கோள் காண்பிக்கவில்லை. மேலும் 45ம் சங்கீதம் ஒரு திருமண சங்கீதமாக உணர்ந்தறியப்பட்டுள்ளது, அது ஆராதனையைப் பற்றிப் பேசுவதே இல்லை. ஆராதனையில் வாய்ப்பாட்டை மாத்திரம் அனுமதிக்கிறவர்கள், திருமணத்தில் (குறிப்பாக அவ்விழாவானது சபைக் கட்டிடத்தில் நடைபெறாதபோது) இசைக்கருவியை மறுக்கத் தேவையில்லை. ஒரு திருமணம் என்பது ஆராதனை ஊழியமாக இருப்பதில்லை, மற்றும் புதிய ஏற்பாடு திருமணங்களை முறைப்படுத்துவதில்லை.*

*இருப்பினும், தேவனை ஆராதிக்கும் விஷயம்பற்றி, சபையானது நாம் விரும்புகிறவற்றைச் செய்யவும் நாம் விரும்பாதவற்றைப் புறக்கணிக்கவும் எடுத்துத் தேர்ந்து கொள்ள முடியுமா?*

### ***வெளிப்படுத்தின விசேஷத்தில்***

*ஆராதனையில் இசைக்கருவிகளைப் பயன்படுத்துதலுக்கான நியாயப்படுத்துதல் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் காணப்படுகிறது என்று சிலர் நம்புகின்றனர், இவர்கள் இந்தத் தீர்க்கதரிசனப் புத்தகத்தின் உருவ இயல்பைப் புறக்கணிக்கின்றனர். வெளிப்படுத்தின விசேஷம் புத்தக மானது, "தேவனுடைய கோபாக்கினையால் நிறைந்த பொற்கலசங்கள்" (15:7; காண்க 16:1), "வேசித்தனமாகிய அருவருப்புகளாலும் அசுத்தத்தாலும்*

*நிறைந்த பொற்பாத்திரம்" (17:4), "சாட்சியின் கூடாரமாகிய ஆலயம்" (15:5), "ஜெபங்களாகிய தூபவர்க்கத்தால் நிறைந்த பொற்கலசங்கள்" (5:8), "சிங்காசனத்திற்குமுன்பாக இருந்த பொற்பீடம்" (8:3), "இருபத்துநான்கு மூப்பர்கள் வெண்வஸ்திரந்தரித்து, தங்கள் சிரசுகளில் பொன்முடி சூடி" (4:4) என்பவை போன்ற, சபையில் இல்லாத ஆனால் பரலோகத்தில் உள்ள பல விஷயங்களைக் குறிப்பிடுகிறது. இவைகள் புதிய ஏற்பாட்டு ஆராதனையில் உள்ளடக்கப்பட வேண்டியிராத விஷயங்களாக இருக்கின்றன.*

## "இயேசுவும் அப்போஸ்தலர்களும் இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட்ட இடங்களில் ஆராதித்தனர்"

சிலர், இயேசுவும் அப்போஸ்தலர்களும் இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட்ட இடமான தேவாலயத்தில் ஆராதித்தனர் என்றும், இது நமது ஆராதனையில் இசைக்கருவிகளைப் பயன்படுத்த அப்போஸ்தலிக்க முன்னுதாரணத்தைக் கொடுக்கிறது என்றும் வாதிட்டுள்ளனர். முதலாவது நாம், இயேசு நியாயப்பிரமாணத்தின்கீழ் வாழ்ந்து நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடித்தார் என்பதை நினைவில் வைக்க வேண்டும். இரண்டாவது நாம், *இப்படிப்பட்ட ஒரு விவாதத்திற்கு அடிப்படையாக தேவாலய ஆராதனையின் முதல் நூற்றாண்டு விவரிப்புகள் எதையும் கொண்டிருப்பதில்லை மற்றும் இவ்வேளையில் தேவாலயத்தில் இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டன என்பதற்கு ஆதாரம் எதையும் நாம் கொண்டிருப்பதில்லை.* இவ்விவாதமானது, மிகவும் முந்திய பழைய ஏற்பாட்டு விவரிப்புகள் அல்லது மிகவும் பிந்திய ரபித்துவ விவரிப்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் எழுந்த யூகங்களாக உள்ளது.

பெந்தெகோஸ்தே நாளுக்குப் பின்பு, கிறிஸ்தவர்கள் தேவாலயத்தில் அனுதினமும் கூடிவந்தனர் (நடபடிகள் 2:46). பேதுருவும் யோவானும் மாலை ஜெப வேளையில் தேவாலயத்திற்குச் சென்றனர் என்றும் நமக்குக் கூறப்படுகிறது (நடபடிகள் 3:1), இருப்பினும் அதற்கிணையான "ஜெப வேளை" ஊழியம் ஒன்றின் விவரிப்பை நாம் கொண்டிருப்பதில்லை. இந்த எடுத்துரைப்பு, அப்போஸ்தலர்கள் தேவாலய ஆராதனையில் *பங்கேற்றனர்* என்பதாக எதுவும் கூறுவதுமில்லை. தாவீது அரசரின் ஏற்பாட்டின்படி, பாடல் பாடுதல் உள்ளிட்ட தேவாலயத்தில் ஆராதனையானது ஆசாரியர்கள் மற்றும் லேவியர்களால் செய்யப்பட்டது - இது சபைக்குழுமத்தினரால் செய்யப்பட வில்லை.

ஜெபவேளையில் மக்கள் ஒன்றுகூடுதல் என்பது சுயவிருப்பத்தின் படியானதாக இருந்தது. பலிசெலுத்துதல்களுக்கு அவர்கள் வர வேண்டும் என்று நியாயப்பிரமாணம் கேட்டுக்கொள்ளவில்லை, இருப்பினும் அவ்விடத்தில் அப்போஸ்தலர்கள் கூட்டங்களைக் கண்டு அவர்களுக்குப் போதித்தனர். அங்கு கூடியிருந்த - ஏறக்குறைய ஐயாயிரம் - பேர்களுக்குப் பேதுரு பிரசங்கித்தார் என்று நடபடிகள் 4:4ல் நாம் அறிகிறோம். அப்போஸ்தலர்கள் "சாலொமோன் மண்டபம்," "தேவாலயம்" மேலும் "மற்ற இடங்களிலும்" இயேசுவைப் பற்றிப் போதித்தனர் (நடபடிகள் 5:12, 42). தேவாலயம் என்பது கூடிவர ஒரு வசதியான இடமாக இருந்தது.

அமெரிக்காவின் முந்திய தலைமுறைகளில் ஒன்று, சனிக்கிழமை மாலைவேளைகளில் கூட்டங்களுக்குப் போதிக்க, நீதிமன்ற

இல்லத்தின் படிகளை ஒரு வசதியான இடமாகக் கண்டிருந்தது. இரண்டாம் உலகப்போரின்போது, நகரப்பூங்கா பிரசங்கிக்க ஏற்ற இடமாக இருந்தது. இவ்விரு இடங்களில் எதுவும் மதரீதியான முக்கியத்துவம் கொண்டிருந்ததற்காகத் தேர்ந்தெடுக்கப்படவில்லை. மக்கள் அங்கிருந்தனர் என்பதற்காகவே அவைகள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தன.

## “இசைக்கருவிகள் இசைவிணக்கத்திற்கு வேறுபடுவதில்லை”

இசைக்கருவிகளின் பயன்பாட்டை நியாயப்படுத்துவதற்குச் சிலர் இதை இசைவிணக்கத்துடன் பாடுதலுக்குச் சமமாக்கியிருக்கின்றனர். நான்கு பாக இசைவிணக்கம் என்பது புதிய ஏற்பாட்டில் பரிந்து உரைக்கப்பட்டிருக்கவில்லை மற்றும் இது அப்போஸ்தலர்களின் காலத்திற்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பின்பு வரையிலும் மேம்படுத்தப்பட்டிருக்கவில்லை. இருப்பினும் இந்த உண்மையை இசைக்கருவிகள் பயன்படுத்துவதற்கான விவாதத்திற்குப் பயன்படுத்துதல் என்பது தவறானதாக உள்ளது. பலஸ்தீன ஜெப ஆலயங்களில் முதல் நூற்றண்டின் பாடுதலுக்கு அக்காலத்தை ஒட்டிய விவரிப்பு எதையும் நாம் கொண்டிராது இருக்கையில், அலெக்சாண்டிரியாவைச் சேர்ந்த பிலோ என்பவர், எகிப்தின் அலெக்சாண்டிரியாவில் (யூதத் தத்துவஞானிகளான) தெராபியூட்டே என்பவர்களின் பாடுதலைப் பற்றி விவரித்தார். இந்தப் பாடுதல் என்பது ஒரே வகையானதாக இருக்கவில்லை. சில வேளைகளில் ஆண்களும் பெண்களும் வரிகளை உச்சாடனம் செய்தனர்:

> … தெராபியூட்டேன் இருபால் மக்களின் பாடகர் குழுவானது, சுரத்திற்கு சுரத்திலும், குரலுக்குக் குரலிலும் பதில் அளித்தது, பெண்களின் உச்ச தொனியானது ஆண்களின் கீழ்த்தொனியுடன் ஒன்று கலந்து, இசைவிணக்கமான இசை நிகழ்வை, உண்மைக் கருத்தில் இசையை உருவாக்கிற்று.[4]

இது நான்கு பாக இசைவிணக்கத்தையல்ல, ஆனால் இரு பாகத்தையே தெளிவாகக் கருத்தாய்த் தெரிவிக்கிறது. பாடுதல் யாவும் ஒன்றிசைந்து இருக்கவில்லை. பாடுதல் ஒன்றிசைந்து, பதில்கூறும் வகையில், எதிர்த்தொனியில், இருபாகத்தில் அல்லது நான்கு பாகத்தில் இருந்தாலும், அது யாவும் பாடுதலாகவே இருந்தது, மற்றும் இதுவே புதிய ஏற்பாடு கட்டளையிடுவதாக உள்ளது.

## “*PSALLEIN* என்பது இசைக்கருவி ஒன்றைப் பயன்படுத்துதலைக் கேட்டுக்கொள்கிறது”

சிலர் (*psallein*) என்ற வினைச்சொல்லில், இசைக்கருவி ஒன்றைப் பயன்படுத்துதல் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது என்று மனநிறைவு அடைகின்றனர், ஏனெனில் இசைக்கருவி ஒன்றின் கம்பிகளை மீட்டுதலை உள்ளடக்குதல் என்பது இந்த வினைச் சொல்லுக்கு அடிக்கடி தரப்படுகிற முதன்மை அர்த்தமாக உள்ளது. அந்த விளக்கம் சரியானதாக இருக்கிறது என்றால், ஒருவர் இந்த வினைச் சொல் இசைக்கருவிகளின் துணையைப் பயன்படுத்தும்படி

கேட்டுகொள்வது எதுவோ அதை மாத்திரமே செய்யமுடியும்.

இந்த மனநிறைவு செல்லத் தக்கதாக இருந்தால், இது அதிகமானவற்றை நிரூபிக்கிறது என்பதே இதன் தவறாக உள்ளது. சங்கீதங்களில் இசைக்கருவிகள் குறிப்பிடப்படாத இடங்களில் *psallein* என்ற வார்த்தை இருத்தல்கள் என்பது, இசைக்கருவிகள் குறிப்பிடப்பட்டுள்ள பதினாறு சங்கீதங்களைக் காட்டிலும் அதிக எண்ணிக்கையில் உள்ளது.

இந்த விவாதம் செல்லத்தக்கதாக இருந்தது என்றால், இசைக்கருவியொன்றைப் பயன்படுத்துதல் என்பது தெரிவு செய்து கொள்வதாக அல்ல ஆனால் கடமையாக இருக்கும். அந்தக் கருத்தில் மனநிறைவு கொள்ள எவரொருவரும் விரும்ப மாட்டார். இசைக்கருவிகளைப் பயன்படுத்துவோர், ஒரு குழுவின் உறுப்பினர்கள் பொருத்தமானதாகக் காணும் வகையில் அவற்றைப் பயன்படுத்துதல் அல்லது பயன்படுத்தாது இருத்தல் என்பதை, ஆராதனையில் தெரிவுசெய்து கொள்ளும் விஷயமாக இருத்தலையே விரும்புகிறார். தொழில்நுட்பப் பிரச்சனையினால் ஒரு இசைக்கருவி வேலை செய்யாது இருந்த கூட்டங்களில் நான் இருமுறை இருந்துள்ளேன். அப்படிப்பட்ட வேளையில் ஆராதனையில் பாடுதல் என்பது விட்டுவிடப்பட்டதா? இல்லவே இல்லை! ஒரு விளக்கம் அல்லது தவறுக்கு வருந்துதல் என்பது அளிக்கப்பட்டது, மற்றும் அந்தக் குழுக்கள் இசைக்கருவிகள் இன்றியே பாடினர். இசைக்கருவிகள் பயன்படுத்துவோர் வாய்ப்பாட்டைப் பாடியே ஆராதிப்பவர்களுடன் ஆராதிக்க மனவிருப்பமாக இருக்கின்றனர்.

## "இசைக்கருவி என்பது பாடுதலுக்கு ஒரு உதவியாக மாத்திரமே உள்ளது"

இசைக்கருவி என்பது ஆராதனையில் ஒரு பாகமாக இருப்பதில்லை, ஆனால் அது ஆராதனைக்கு ஒரு உதவிப்பொருளாக மாத்திரம் உள்ளது என்பது வாதிடப்படுகிற இன்னொரு விவாதமாக உள்ளது. ஒப்புவமைகள் உரிமை கோரப்படுகின்றன; ஒரு கைத்தடி நடப்பதற்கு உதவுகிறது, கண் கண்ணாடிகள் பார்ப்பதற்கு உதவுகின்றன, மற்றும் காது கேட்கும் ஒரு கருவியானது கேட்பதை மேம்படுத்துகிறது. பின்பு இந்த ஒப்புவமையில், ஒரு இசைக்கருவியானது இசைக் கவை அல்லது ஸ்தாயிக் குழல், பாடல் புத்தகங்கள், மின்சார விளக்குகள், பிரசங்க மேசைகள், திராட்சரசம் அருந்தும் பாத்திரங்கள் மற்றும் மைக்ரோபோன் போன்றவற்றைப் பயன்படுத்துதல் போலவே உள்ளது என்று விவாதிக்கப்படுகிறது.

இந்த ஒப்புவமைகள் இணையாக இருப்பதில்லை என்பது தெளிவு. ஒரு கைத்தடியானது தானே நடக்க இயலாது, ஆனால் ஒரு இசைக்கருவி பாடுதல் எதுவுமின்றியே இசைக்கப்பட முடியும் - அடிக்கடி இவ்வாறு செய்யப்படுகிறது. இசைக் கவை அல்லது ஸ்தாயி குழல் என்பது கூட்டத்தினரால் வழக்கமாகக் கேட்கப்படுவதில்லை; மேலும் அதன் ஒலியானது பாடுதல் தொடங்கும் முன்னரே நின்று விடுகிறது. ஒரு இசைக்கருவியானது சுதியைப் பெற மாத்திரம் பயன்படுத்தப்பட்டு பின்பு அமைதியாகிறது என்றால், ஒருவேளை எவரொருவரும் அதை மறுக்கமாட்டார்.

ஒரு இசைக்கருவியானது ஆராதனையில் பாகமாக இருப்பதில்லை என்று தர்க்கரீதியாக விவாதிப்பதும் அதேவேளையில் ஆராதனையில் இசைக்கருவிகளைக்

கொண்டிருத்தல் என்பது சங்கீதங்களில் நியாயப்படுத்தப்படுகிறது என்று வேண்டுகோள் விடுப்பதும் ஒருவரால் இயலாது. இவ்விரு விவாதங்களும் பரஸ்பரம் விலக்குதல் கொண்டுள்ளன. பழைய ஏற்பாட்டில், தேவாலயத்தில் தேவனைத் துதிக்க இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டன என்பதைச் சங்கீதங்கள் வெளிப்படையாகக் காண்பிக்கின்றன. செப்துவஜிந்த் வேதாகமத்தில் (LXX), சங்கீதம் 150:1-5ல் இசைக்கருவிகளின் பட்டியலையும், "துதி" (*aineite*) என்ற வார்த்தை திரும்பத் திரும்பப் பயன்படுத்தப்படுதலையும் கண்ணோக்குங்கள். இந்த இசைக்கருவிகளும் மற்றும் நடனமும் (சங்கீதம் 150:4) தேவனைத் துதித்தலின் பாகமாக இருந்தன. தாவீது தேவனைத் துதிக்க இசைக்கருவிகளை ஏற்பாடு செய்திருந்தார் (1 நாளாகமம் 23:5, 6). அவைகள் ஆராதனைக்கு உதவிப்பொருட்களாக மாத்திரம் இருக்கவில்லை. சாலோமோன் தேவாலயத்தை அர்ப்பணித்தபோதும் தேவனைத் துதிக்க இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டன (2 நாளாகமம் 5:12-14). இதில் தேவன் பிரியமற்றவராக இருந்திருக்க மாட்டார்; ஏனெனில் அக்கினி வானத்திலிருந்து இறங்கி, சர்வாங்க தகனபலியையும் மற்றப் பலிகளையும் பட்சித்தது; கர்த்தருடைய மகிமையும் ஆலயத்தை நிரப்பிற்று (2 நாளாகமம் 7:1, 2).

நமது பாடுதலின் மிகமுக்கியமான பாகமான - செய்தி என்பது - வார்த்தைகளில் உள்ளது. ஆராதனையில் பாடல்களுக்கான வார்த்தைகள் சங்கீதங்களில் இருந்தோ, எழுதப்பட்ட பக்கத்தில் இருந்தோ அல்லது வாயின் வார்த்தையில் இருந்தோ வரலாம். வார்த்தைகள் வாசிக்கப்படலாம், மனப்பாடம் செய்யப்படலாம் அல்லது திரை அல்லது சுவரில் ஒளிக்கருவியின் உதவியுடன் காண்பிக்கப்படலாம். நமது பாடல்களுக்கு நாம் வார்த்தைகளை எங்கிருந்து பெற்றாலும், நாம் இன்னும் பாடிக்கொண்டிருக்கிறோம். வார்த்தைகளைப் பிரிந்த நிலையில் உள்ள மனதுடன் பாடல் பாடுதல் இருக்க இயலாது (1 கொரிந்தியர் 14:15), இது இசைக்கருவிகளைக் கொண்டு உணர்த்தப்பட இயலாது.

## "கிறிஸ்தவ ஆராதனை என்பது முறைப்படுத்தப்பட்டதல்ல, எனவே அதிகாரத்துவம் எதுவும் தேவைப்படுவதில்லை"

புதிய ஏற்பாடு ஆராதனையை முறைப்படுத்துவதில்லை, எனவே இசைக்கருவிகளுக்கு அதிகாரத்துவம் எதுவும் தேவையில்லை என்பது இசைக்கருவிகளை ஆராதனையில் பயன்படுத்துவதை நியாயப்படுத்த ஏற்படுத்தப்பட்டுள்ள ஒரு விவாதமாக உள்ளது. இந்த விவாதமானது அதிகமானதை நிரூபிக்க முயற்சி செய்கிறது. இது இசைக்கருவியை நியாயப்படுத்தும் மற்ற எல்லா முயற்சிகளையும் பயனற்றதாக்குகிறது. இது செல்லத்தக்கதென்றால், மற்ற யாவும் கருத்தற்றிருக்கும்.

ஆராதனையைப் பொறுத்தமட்டில் இந்த விவாதம் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்றால், மரியாளிடத்தில் ஜெபித்தல், தீர்த்தம் பயன்படுத்துதல் அல்லது சேர்க்கப்பட்ட மற்ற காரியங்கள் என்ற நடைமுறைகளை மறுத்தலுக்கு அடிப்படை எதுவும் இல்லை. ஆராதனையானது ஆராதிப்பவரின் தனிப்பட்ட விருப்பங்களுக்கு மாத்திரமே உட்பட்டதாகி விடுகிறது. புதிய ஏற்பாட்டை

மாத்திரம் வாசிக்கும் ஒரு நபர், நாம் விரும்புகிறபடியெல்லாம் ஆராதிக்கத் தேவன் நம்மை அனுமதிக்கிறார் என்ற மனக்கருத்தை ஒருக்காலும் பெற்றுக் கொள்ளமாட்டார்.

ஆராதனையில் இசைக்கருவியைப் பயன்படுத்துதல் என்பதற்கான குறிப்பு புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்படவே இல்லை. சீர்திருத்தத்தின் குறிப்பிடத்தக்க சில நபர்கள், புதிய ஏற்பாட்டில் தாங்கள் வாசிப்பதன் அடிப்படையில், ஆராதனையில் இசைக்கருவிகள் பயன்படுத்துதலை எதிர்த்து நின்றனர்.

தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள் தேவனுடைய சித்தத்தைப் பின்பற்றாமல் அவரை ஆராதிக்க முடியும் என்று நினைத்தனர் என்பதற்கான ஒரு இலேசான குறிப்புகூடப் புதிய ஏற்பாட்டில் இல்லை. எழுதப்பட்டதற்கு, அதாவது புதிய ஏற்பாட்டு வேதவசனங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தேவனுடைய சித்தத்திற்கு இசைந்த வகையில் வாழும்படிப் பவுல் கொரிந்தியர்களுக்கு எச்சரிக்கை விடுத்தார் (1 கொரிந்தியர் 4:6).

இயேசு இசையின் விஷயம் பற்றி ஒருக்காலும் ஒன்றும் உரைத்ததில்லையே என்ற போராட்டம் ஏதாவது மதிப்பைக் கொண்டிருக்கும் என்றால், இசைக்கருவிகள் பயன்படுத்துவோர் மற்றும் வாய்ப்பாட்டு மாத்திரம் பாடுபவர் ஆகிய இருசாராருமே தங்கள் நடைமுறைகளில் முன்அனுமானம் செய்த குற்றப்பட்டவர்களாக இருப்பார்கள். சபை எதிர்கொள்ளும் எல்லாப் பிரச்சனைகளைப் பற்றியும் கையாண்டுள்ளதாக இயேசு ஒருக்காலும் உரிமை கோரியது இல்லை. இயேசு தமது மரணத்திற்கு முன்பு, தமது சீஷர்கள் தாங்க இயலாத பலவிஷயங்களை அவர்களுக்குக் கூறவேண்டியிருந்ததாகச் சொன்னார். அவர்களைப் பரிசுத்த ஆவியானவர் சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துவார் என்று அவர் வாக்களித்தார் (யோவான் 16:12, 13). நடபடிகள் புத்தகத்தில் நாம் வாசிப்பதன் அடிப்படையில், அவர்களைப் பரிசுத்த ஆவியானவர் பாடுதலுக்குள் வழிநடத்தினார் ஆனால் இசைக்கருவிகளைப் பயன்படுத்தும்படி வழிநடத்தவில்லை என்று நாம் கூறலாம்.

## “சபைக்குச் சுயாதீனம் தரப்பட்டுள்ளது”

சிலர், புதிய ஏற்பாடானது ஆராதனையில் இசைக்கருவிகள் பயன்படுத்துவதைப் பரிந்துரைப்பதுமில்லை அதைத் தடைசெய்வதுமில்லை என்று உறுதிப்படுத்துகின்றனர். சபையானது தேவனை எவ்வாறு ஆராதிக்க வேண்டும் என்று தெரிவுசெய்துகொள்ளுதல்களில் அது சுயாதீனம் கொண்டுள்ளது என்று அவர்கள் நம்புகின்றனர். தொடக்ககால சபையில், பச்சிளம் குழந்தைகளுக்கு விருத்தசேதனம் செய்விக்க வேண்டும் மற்றும்/அல்லது பண்டிகை நாட்களைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று நம்பி செயல்படுத்திய யூதத்துவத்தில் இருந்து வெளியே வந்தவர்கள் தங்கள் செயல்முறைகளைத் தொடர அனுமதிக்கப்பட்டனர் ஆனால் அவற்றைப் புறஜாதியாருக்கு வற்புறுத்த அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. ஆகவே - இவ்வகையான விவாதம் தொடருகையில் பழைய ஏற்பாடு இசைக்கருவிகளுடன் தேவனை ஆராதித்தலைக் கொண்டிருந்ததால், சபையானது அவற்றைப் பயன்படுத்தலாமா அல்லது அவற்றைப் பயன்படுத்த வேண்டாமா என்று தெரிவுசெய்துகொள்வதில் சுயாதீனம் கொண்டு இருந்திருக்க வேண்டும். விருத்தசேதனம், உணவுகள் மற்றும் ஓய்வுநாள் விஷயங்களைப் பற்றிப் பவுல் கலந்துரையாடினார்; ஆனால்

அவர் இசைக்கருவிகளின் இசைபற்றிய கேள்வியைக் கலந்துரையாடவில்லை. ஆகவே நாம் மீண்டுமாக வேத வசனங்களின் அமைதியைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். ஒரு வாடிக்கையாளரின் அனுமதியின்றி அவருக்கு ஒரு பொருளை அனுப்பி, பின்பு அதற்கான தொகையை நீதிமன்றச் சட்டத்தின்படி வசூலிக்க முயற்சி செய்யும் வர்த்தகர் ஒருவர், அமைதி என்பது அனுமதிப்பதாக இராமல் தடைசெய்வதாக உள்ளது என்பதை விரைவில் அறிந்துகொள்வார்.

## முடிவுரை

புதிய ஏற்பாடு இசைக்கருவிகள் பயன்படுத்துவதை அதிகாரத்துவப்படுத்துகிறது என்று வெற்றிகரமாக விவாதிக்கக் கூடிய நபரை நான் இனிதான் சந்திக்க வேண்டியுள்ளது. ஆனால் பலர் அவற்றின் பயன்பாட்டை விருப்பத் தேர்வாகக் கொண்டிருக்க விரும்புகின்றனர். வேதாகமத்தில் எவ்விடத்தில், எந்த ஒரு கட்டளை அல்லது புத்திமதிக்காவது கீழ்ப்படிய வேண்டியது விருப்பத் தேர்வாக உள்ளது? இசைக்கருவியின் இசையை அங்கீகரிப்பவர்கள், இசைக்கருவிகள் இல்லாதபோது அல்லது பயன்படுத்த இயலாதவையாக இருக்கும் எந்த வேளையிலும் பாட மனவிருப்பம் கொண்டுள்ளனர். இயேசுவில் விசுவாசம் கொள்ளுதல் என்பது கட்டளையிடப்பட்டுள்ளது என்று நாம் யாவரும் ஒப்புக்கொள்ள முடியும் - எனவே ஏதாவதொன்றை விசுவாசித்தல் என்பது கிறிஸ்தவர்களாகிய நாம் நமது சொந்த முன்னுரிமை அளித்தலின்படி செய்யஅல்லது செய்யாதிருக்கத் தேர்ந்து கொள்ளும் விஷயமாக உள்ளதா? மனந்திரும்புதல் மற்றும் ஞானஸ்நானம் ஆகியவை கட்டளையிடப்பட்டுள்ளன என்று நாம் ஒப்புக்கொள்கிறோம், ஆனால் இந்தக் கட்டளைகள் விருப்பத் தேர்வாக உள்ளனவா? விருப்பத்தேர்வான வேதாகமக் கட்டளைகள் மதியற்றவையாக இருக்கும்.

இசைக்கருவியின் இசையைப் பயன்படுத்துதல் பற்றிய கேள்வியானது, 150 ஆண்டுகளுக்கு முன்பு இசைக்கருவிகள் அறிமுகப்படுத்தப்பட்டபோது நிறுத்தப்பட்ட அதே இடத்தில் மிகச்சரியாக நிறுத்தப்பட்டுள்ளது. பொதுவான மதச்சூழ்நிலையானது இதற்கு முன்பு நிலவியதைக் காட்டிலும் விரிவான சகிப்புத் தன்மை நோக்கி மாறியுள்ளது, ஆனால் அடிப்படைக் கேள்வியானது ஒன்றுபோலவே நிலைத்துள்ளது.

இருபுறத்திலும், தங்களை உண்மையான, தேவபயமுள்ள, சுயத்தைத் தியாகம் செய்கிற, தகவல் பெற்றுள்ள மக்கள் என்று சம அளவில் மதித்துக்கொண்டுள்ள மக்கள் உயர்வான இலட்சிய நோக்கங்களுடன் வாழ முயற்சி செய்கின்றனர். இவ்விருசாராரில் எவரும், எல்லா விஷயமும் ஆராதனையில் அனுமதிக்கப்படக்கூடியதே என்று கூறுவதில்லை. இவ்விருசாராரும், மனிதப் பாரம்பரியத்தின்மீதுமாத்திரமே அடிப்படை கொண்டுள்ள மற்றும் அதனால் தேவனுடைய பார்வையில் கண்டனம் பண்ணப்பட்டவையாக உள்ள ஆராதனை நடைமுறைகளின் நீண்ட பட்டியலுக்கு எதிர்ப்பாக உள்ளனர்.

இருப்பினும் ஆராதனையில் இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுதல் பற்றிய கேள்வி குறித்து அவர்கள் வழிபிரிந்து நிற்கின்றனர். இசைக்கருவிகளைப் பயன்படுத்துவோர், தாங்கள் தேர்ந்து கொள்ளும் இசைக்கருவிகளைப் பயன்படுத்த அல்லது பயன்படுத்தாது இருக்கக் கிறிஸ்துவின் சுயாதீனத்தின் கொள்கையின் கீழ் தாங்கள் சுயாதீனம் கொண்டிருப்பதாக நம்புகின்றனர்.

தவறாக உரிமைகோரப்பட்டுள்ள இந்த சுயாதீனத்தை ஒருமைப்பாட்டிற்காகவோ அல்லது வேறு நோக்கத்திற்காகவோ அவர்கள் விட்டுக்கொடுக்க மனவிருப்பம் கொண்டுள்ளதாக எதையும் நான் இதுவரை எதிர்கொண்டதில்லை. ஆராதனைக்கு வாய்ப்பாட்டு மாத்திரமே ஏற்புடையது என்று நம்புகிறவர்கள் அவர்களையும் அவர்களின் நடைமுறைகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் நாடுகின்றனர்.

வாய்ப்பாட்டை மாத்திரமே பாடுபவர்களின் மத்தியில், ஒருமைப்பாட்டிற்காக உடன்பாடு ஏற்படுத்த மனவிருப்பம் என்ற மக்கள் அலை இருப்பதாகக் காணப்படுகிறது மற்றும் அவர்கள் வாய்ப்பாட்டும் அனுமதிக்கப்படும் வரையில் இசைக்கருவியின் இசையை ஏற்றுக்கொள்கின்றனர். அவர்கள் செய்வது தேவனுக்குப் பிரியமானதா என்று புதிய ஏற்பாட்டினால் காண்பிக்கப்படக் கூடியதாக இருப்பதைக் காட்டிலும் ஒருமைப்பாட்டை அவர்கள் மிகமுக்கியமானதாகக் காணுகின்றனர். வேதவசனத்தின் அமைதி கனப்படுத்தப்படுவதாகக் காணப்படுவதில்லை. ஒருவர் கள்ளத்தீர்க்கதரிசியாக இருத்தலின் இடர்ப்பாட்டிற்கு இவ்வளவு அதிகம் முன்அனுமானம் கொண்டிருந்தால், இந்த அலையானது ஒருமைப்பாட்டைக் கொண்டுவராது; இரு குழுக்கள் இருந்த இடத்தில் இனி மூன்று குழுக்கள்தான் இருக்கும். இசைக்கருவிகளைப் பயன்படுத்துவோர் பாடுதலில் இசைக்கருவிகளின் துணைகொண்டிருப்பார்கள். வாய்ப்பாட்டை மாத்திரம் வலியுறுத்துவோர் இதற்கு முன்பு தாங்கள் செய்தது போன்று ஆராதனையில் பாடுவதுடன் தொடருவார்கள். மூன்றாவது குழுவினர் தங்கள் இளைஞர்கள் எல்லாப்பாடல் களையும் இசைக்கருவிகளின் துணையுடன் பாடும் வரையிலும், இவ்விரு வகையிலும் பாடுவார்கள். விளைவு தவிர்க்க இயலாததாக உள்ளது.

புதிய ஏற்பாட்டு சபையில் இசைக்கருவிகளின் இசையை நியாயப்படுத்த, அதில் தேவன் பிரியப்படுகிறார் என்று காண்பித்தல் அவசியமாக உள்ளது. ஆனால் அது செய்யப்பட இயலாது. தேவனை ஆராதிப்பதில் அவர் எதை விரும்புகிறார் என்று தேர்ந்துகொள்ளும் உரிமையைத் தேவன் மாத்திரமே கொண்டுள்ளார்.

---

குறிப்புகள்

[1]J. W. Roberts, “Is Singing in the ‘Worship’ Service Demonstrably Scriptural?” *Firm Foundation* 86 (26 August 1969): 532. [2]Ignatius *First Epistle to the Ephesians* 4. [3]Pliny *Pliny's Epistles* 10.96. [4]Philo *The Contemplative Life* 88.

## அடிக்கடி கேட்கப்பட்ட கேள்விகள்

**கேள்வி:** *கிறிஸ்தவர் செய்கிற ஒவ்வொரு விஷயமும் ஆராதனையாக இருப்பதில்லையா?*

பதில்: இல்லை, சில மக்கள், “நாம் செய்கிற ஒவ்வொரு விஷயமும் ஆராதனையாக இருப்பதால், நாம் செய்கிற எந்த விஷயத்தையும் ஆராதனைக்குள் கொண்டுவர நம்மால் முடியும். கிறிஸ்தவ சபைக்கூடுகைகளுக்குப் புறம்பே நாம் இசைக்கருவிகளை இசைக்கிறோம், எனவே அவைகள் சபைக்கூடுகைகளிலும்

சரியானவையாக இருக்க வேண்டும்'' என்று வாதிடுகின்றனர். ''ஆராதனை'' என்பதற்கான (*proskuneo*) என்ற கிரேக்க வினைச்சொல் ''ஒருவருக்கு முன்பாக பயங்கலந்த மரியாதையில் வீழ்ந்து பணிதல்'' என்றும் ''(ஒருவரைநோக்கி) பயங்கலந்த மரியாதையை வெளிப்படுத்துதல்'' என்றும் அர்த்தப்படுகிறது. நேரடி அர்த்தத்தில் இது, ''இன்னொருவர் மீதான பயங்கலந்த மரியாதை மதிப்புடன் முத்தமிடுதல் என்று அர்த்தப்படுகிறது.'' இந்தச் செயல் தொடக்க மற்றும் முடிவு நிலைகளுடன் குறிப்பிட்ட காலங்களில் நடைபெறுகிறது. எல்லா விஷயமும் ஆராதனை என்பதாக இருந்தது என்றால், ஆராதிப்பதற்கென்று மக்கள் வேறு ஒரு இடத்திற்குச் செல்லவேண்டியதிருக்காது. இருப்பினும், வேதாகமத்தில் மக்கள் ஆராதிப்பதற்கென்று குறிப்பிட்ட இடங்களுக்கு அடிக்கடி சென்றதையும் அவர்கள் தங்கள் ஆராதனையைக் குறிப்பிட்ட கால இடைவெளியில் தொடங்கி முடித்ததையும் நாம் காணுகிறோம்:

- யூதர்களும் கிரேக்கர்களும் பண்டிகையில் ஆராதனை செய்யச் சென்றனர் (யோவான் 12:20).
- எத்தியோப்பிய மந்திரி ஆராதிப்பதற்காகப் பல மைல்கள் தூரம் பயணம் செய்து எருசலேமை அடைந்தார் (நடபடிகள் 8:27).
- பவுல் ஆராதிப்பதற்காக எருசலேமுக்குப் பயணம் செய்ததன்மூலம் தமது மூன்றாவது ஊழியப்பயணத்தை நிறைவு செய்தார் (நடபடிகள் 24:11).
- ஆராதனையானது குறிப்பிட்ட காலங்களில் தொடங்கிற்று என்று வெளிப்படுத்தின விசேஷப் புத்தகம் காண்பிக்கிறது (4:10; 11:1; 14:7; 15:4; 19:10; 22:8, 9).

''ஊழியம் என்று அர்த்தப்படுகிற *latrueo* என்ற இன்னொரு கிரேக்க வார்த்தையானது சில வேளைகளில் (ரோமர் 12:1; காண்க KJV) ''ஆராதனை'' என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. இவ்வார்த்தை, ''ஆராதனை'' உட்பட. தேவனுக்கு நாம் செய்கிற ஊழியம் யாவற்றையும் ஒன்று திரட்டிக் கூறுகிறது. எல்லா வேளைகளிலும் நாம் தேவனுக்கு ஊழியம் செய்யக்கூடும், ஆனால் ஒரு நாளின் ஒவ்வொரு நிமிடத்திலும் நாம் அவரை ஆராதிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுவதில்லை. அதற்குப் பதிலாக நாம் நமது ''ஊழியத்தை'' விட்டுவிட்டு ''ஆராதிக்க'' செல்லுகிறோம்.

யாக்கோபுவின் கிணற்றின் அருகில் அமர்ந்த இயேசு, சமாரியப் பெண்ணிடத்தில், ''ஆராதிக்கும்'' இடம் பற்றிப்பேசினார் (*proskuneo*). யூதர்கள், தேவன் தேர்ந்தெடுத்திருந்த இடமான எருசலேமில் (1 இராஜாக்கள் 11:13) ஆராதிக்கவும், தேவன் உள்ளடக்கியிராத எதையும் ஆராதனையில் அறிமுகப் படுத்துவதில் இருந்து விலகியிருக்கவும் அறிந்திருந்தனர்.

இசைக்கருவிகளை நியாயப்படுத்துதல் என்ற வகையில் இந்தச் சிந்தனையானது உள்ளாகத் தவறானதாக இருக்கிறது, ஏனெனில் நாம் செய்கிற எல்லாச் செயலும் ஆராதனையாக இருப்பதில்லை.

**கேள்வி:** தேவனை மகிமைப்படுத்துவற்கு நாம் நமது தாலந்துகளைப் பயன்படுத்த வேண்டும் என்று அவர் விரும்புவதில்லையா?

**பதில்:** ஆம், ஆனால் நமது தனிப்பட்ட தாலந்துகளை ஆராதனையில் பயன்படுத்துவதைத் தேவன் எதிர்பார்க்கிறார் என்று உறுதிப்படுத்துதலானது

பரந்துபட்ட பல செயல்களுக்குக் கதவைத் திறப்பதாக இருக்கும். தேவனை ஆராதித்தல் என்பது ஆவியிலும் உண்மையிலும் இருக்க வேண்டும் என்று இயேசு போதித்தார் (யோவான் 4:24), ஒவ்வொரு நபரும் தாம் கொண்டுள்ள தாலந்துகளை ஆராதனையில் உள்ளடக்க வேண்டும் என்று அவர் போதிக்கவில்லை.

ஆராதனை ஊழியங்களில் நாம் நமது தாலந்துகளைக் காட்சிப்படுத்த வேண்டும் என்றால், இசைக்கான செயல்விளக்கத்தை நாம் தடைசெய்ய இயலாதிருக்கும். கிறிஸ்தவர்களின் தாலந்துகளில். ஒரு சிலவற்றைக் குறிப்பிட வேண்டுமென்றால், கலை, சமையல் மற்றும் விளையாட்டுத் திறன்கள் ஆகியவை உள்ளடங்கியிருக்கின்றன. தேவனால் தரப்பட்ட தாலந்துகளுக்காகத் தேவன் துதிக்கப்படுதலுக்கு, எல்லாக் கிறிஸ்தவர்களும் சபைக்குழுமத்திற்கு முன்பாகத் தங்கள் தாலந்துகளை விளக்கப் படுத்தும் நிகழ்ச்சிகளைச் செய்து காண்பிப்பதென்றால், ஆராதனை சபைக்கூடுகையில் எதை நடைமுறைப்படுத்தலாம் என்பதற்கு வரையறை எதுவும் இராது.

**கேள்வி:** தொடக்ககால சபையார், துன்புறுத்தப் படுவோமோ என்று பயந்ததால் இசைக்கருவிகளைத் தவிர்த்திருக்கவில்லையா?

**பதில்:** முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்கள் அடிக்கடி இரகசியமாகக் கூடிவந்தனர், எனவே அவர்கள் இசைக்கருவிகளைப் பயன்படுத்த அஞ்சியிருந்தனர் என்று சிலர் உரிமை கோருகின்றனர். இசைக்கருவிகள் என்பவை சபைகூடுகைக்குச் செல்லும் வழியில் மறைத்து எடுத்துச் செல்லக் கடினமானவைகளாக இருந்தன மற்றும் துன்புறுத்தப்பட்ட கிறிஸ்தவர்கள், அதன் சப்தமானது தாங்கள் எங்கு ஆராதிக்கிறோம் என்பதை வெளிப்படுத்தி விடும் என்று அஞ்சினர் என்பது இவர்களின் நினைப்பாக உள்ளது.

துன்புறுத்தப்படுதல் தொடங்குவதற்கு முன்பு அல்லது அது முடிந்த பின்பு, சபையானது இசைக்கருவிகளைப் பயன்படுத்தியிருந்தால், இந்த விவாதம் சற்றே செல்லத்தக்கதாக இருந்திருக்கும். இருப்பினும், சபையானது கி.பி. 300களில் ரோம சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப் பட்டதாயிற்று, ஆனால் அதற்கு ஏழு நூற்றாண்டுகளுக்குப் பின்பு வரையிலும் சபைகளில் இசைக்கருவிகள் அறிமுகப்படுத்தப்படவில்லை, பத்து நூற்றாண்டுகள் வரையிலும் கிறிஸ்தவ ஆராதனையில் இசைக்கருவிகள் முற்றிலும் இல்லாது இருந்த நிலையானது, ஆராதனை ஊழியங்களில் இசைக்கருவிகள் தவிர்க்கப்பட்டதற்கு துன்புறுத்தப்படுவோமோ என்ற பயம், ஒரு காரணமாக இருந்ததில்லை என்பதற்கு சாட்சியாக உள்ளது. அவைகள் கர்த்தரால் அங்கீகரிக்கப்படவில்லை என்பதாலேயே அவைகள் பயன்படுத்தப்படாது இருந்தன.

**கேள்வி:** முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்கள் தங்களை மக்கள் மற்ற மதக்குழுக்களில் இருந்து வேறுபட்டவர்கள் என்று காணக்கூடும்படிக்கு இசைக்கருவிகளைத் தவிர்த்திருக்கவில்லையா?

**பதில்:** யூதத்துவம் மற்றும் புறதெய்வ வணக்கம் ஆகியவற்றிலிருந்து ஒரு தெளிவான வித்தியாசத்தைக் காண்பிக்க அல்லது மனந்திரும்பியவர்கள் யூத அல்லது புறதெய்வ ஆராதனைக்குத் திரும்பி இணைவு கொள்வதை தடுக்க இசைக்கருவிகள் தடுக்கப்பட்டிருந்தன என்ற விவாதம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

*மிக முக்கியமாக, உள்ளான தவற்றின் தன்மையினால் அல்ல, ஆனால் யூதத்துவம் அல்லது புறதெய்வ வணக்கம் என்ற, கிறிஸ்தவராவதற்கு முன் இருந்த மனநிலைகளில் இருந்து கொண்டுவரப்பட்ட பலமான இணைவுகளினால், இசையின் குறிப்பிட்ட வகைகள் தவிர்க்கப்பட்டு இருக்க வேண்டும். இருப்பினும் நடக்கையை மாற்ற உள்ளாக வல்லமை பெற்றிருந்தது என்பதால் அல்ல, ஆனால் பலவீனமான மனச்சாட்சி ஒன்றைக் குற்றப்படுத்தக் கூடும் என்பதாலேயே, தவிர்க்கப்பட வேண்டியது எது என்ற அடிப்படைவாதக் கிறிஸ்தவக் கொள்கையானது ஆட்சி செலுத்திற்று. ஆகவே* தன்னில்தானே *தூய்மையாக இராத (ரோமர் 14:14), மற்றும் வல்லமை பெற்றிராத, புறதெய்வ வணக்கக்காரர்களின், விஷயங்களின் வல்லமை பெற்றகொள்கை மற்றும் விஷயங்களின் மத்தியில் வித்தியாசம் காண்பதின் கிறிஸ்தவக் கொள்கை ஆகிய இரண்டிற்கும் இடையில் இருந்த வித்தியாசமானது, இசை என்பது கடினமானதாக, மாற்றப்பட இயலாததாக மற்றும் வரையறைக்கு உட்பட்டதாக இருந்தது என்று தொடக்ககால சபை அமைத்து வைத்த தர அளவையின் எந்தக் கருத்திற்கும் மேலாகப் பயணிக்கிறது.*[1]

*கிறிஸ்தவர்கள் புறதெய்வ வணக்கத்தில் ஈடுபடாது இருக்கும்படி புத்திகூறப்பட்டனர் (கொலோசெயர் 2:18), ஆனால் இது, ஆராதனையில் பயன்படுத்தப்பட வேண்டியிருந்தது என்ன என்பது, மனந்திரும்பியவர்களை கடந்த கால மத நடவடிக்கைகளுக்குத் திரும்புவதில் இருந்து தடைசெய்யும் விருப்பத்தில் இருந்து மாறுபட்டு மாத்திரம் இருக்க வேண்டும் என்று அர்த்தப்படுத்துவதில்லை. எவ்வாறு ஆராதிக்கவேண்டும் என்பதைப் புதிய கிறிஸ்தவர்கள், சபையின் தலையான (எபேசியர் 4:11-15; கொலோசெயர் 2:19) இயேசுவிடத்தில் இருந்து கற்றுக் கொள்ள வேண்டியிருந்தது (மத்தேயு 28:18-20).*

***கேள்வி:*** *இசைக்கருவிகள் என்பவை வெறும் சந்தர்ப்பவாதம் சார்ந்த விஷயமாக மாத்திரம் இருப்பதில்லையா?*

***பதில்:*** *மக்களில் சிலர், 1 கொரிந்தியர் 6ன் அடிப்படையில், இசைக்கருவிகள் கட்டளையிடப்படவில்லை, ஆனால் அவைகள் சந்தர்ப்பவாதம் சார்ந்தவைகளாக உள்ளன என்று முடிவு செய்கின்றனர். பவுல், "எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அகிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது" என்று எழுதினார் (வசனம் 12அ; காண்க 10:23அ).*

*கிறிஸ்தவர்களுக்கு எல்லாம் சரியானதே என்பது பவுல் இவ்விடத்தில் ஏற்படுத்தும் கருத்தல்ல. வேறொரு இடத்தில் அவர், உண்மையான உபதேசத்திற்கு நேர்மாறாக உள்ள விஷயங்களைப் பட்டியலிட்டார் (1 தீமோத்தேயு 1:9, 10; காண்க ரோமர் 1:24-32; 1 கொரிந்தியர் 6:9, 10; கலாத்தியர் 5:19-21; எபேசியர் 5:3-12; கொலோசெயர் 3:5-9; 2 தீமோத்தேயு 3:2-7; தீத்து 3:9-11). அநுபவிக்க அதிகாரமுள்ள ஒவ்வொரு விஷயத்தையும் செய்தல் என்பது கிறிஸ்தவர்களுக்கு சந்தர்ப்பவாதத்திற்கு உட்பட்டதாக இருப்பதில்லை என்று பவுல் தெளிவாகப் போதித்தார். ஒரு விக்கிரகத்திற்குப் படைக்கப்பட்ட மாம்சத்தைப் புசித்தல் என்பது சட்டத்திற்கு உட்பட்டதாக இருந்தாலும், அது சகோதரர் ஒருவரின் மனச்சாட்சியைக் காயப்படுத்தினால் அல்லது*

அவர் இடறிவிழும்படி வழிநடத்தினால், அது செய்யத் தகுதியானதாக இராது (1 கொரிந்தியர் 10:25-29; மேலும் காண்க 8:13). எல்லா வகையான உணவுகளையும் உண்பதற்குப் பவுல் உரிமை கொண்டிருந்தாலும், அவர் மாம்சம் உண்பது மற்ற கிறிஸ்தவர்களுக்கு அழிவைக் கொண்டுவரும் என்றால், தாம் மாம்சம் உண்பதில் இருந்து விலகிவிடுவதாக அவர் கூறினார் (1 கொரிந்தியர் 8:7-13).

இசைக்கருவிகளைப் பொறுத்தமட்டில், அவைகள் சந்தர்ப்பவாதத்திற்கு உட்பட்டவை என்று நிரூபிக்கப்பட முடிவதற்கு முன்னர், அவற்றின் பயன்பாடு சட்டத்திற்கு உட்பட்டது என்று நிரூபிக்கப் படவேண்டும். அவைகள் புதிய ஏற்பாட்டு ஆராதனையின் பாகமாக உள்ளடக்கப் பட்டிராதபடியால், அவைகள் சட்டத்திற்கு உட்பட்டவை அல்ல. அவைகள் சட்டத்திற்கு உட்பட்டவைகளாக இருந்த போதிலும், அவற்றின் பயன்பாடு சக கிறிஸ்தவர் ஒருவரில் குற்ற உணர்வைத் தூண்டும் அல்லது அவர் இடறி விழக்காரணமாகும் என்றால், அவைகள் பயன்படுத்தப் படக்கூடாது.

**கேள்வி:** ஆராதனையில் இசைக்கருவிகளைப் பயன்படுத்துதல் என்பது கருத்துச் சார்பற்ற விஷயமாக இருப்பதில்லையா?

**பதில்:** ஆராதனையில் இசைக்கருவிகளைப் பயன்படுத்துதல் என்பது கலந்துரையாட மிகவும் சிறிய விஷயமாக உள்ளதென்று சிலர் நினைக்கின்றனர். வழக்கமாக அவர்கள், அவற்றின் பயன்பாட்டை மறுப்பவர்கள் மிகவும் சட்டம் பேசுபவர்களாக இருப்பதாகவும், தேவன் ஏற்படுத்தியுள்ள சட்டங்களை மிகவும் கண்டிப்பானவை ஆக்குபவர்களாக இருப்பதாகவும் நம்புகின்றனர்.

பரிசேயர்களின் மனிதமார்க்கமான கட்டுப்பாடுகளின் சுமைக்கு எதிராக இயேசு மிகவும் பலமாகப் பேசினார், ஆனால் அவர் நியாயப்பிரமாணத்தைக் கவனம் நிறைந்த வகையில் கைக்கொள்வதைக் கண்டனம் செய்யவில்லை. யூதர்கள் நியாயப்பிரமாணம் *முழுமைக்கும்* கீழ்ப்படிய வேண்டும் என்றும் அவர்கள் சில கட்டளைகளைத் தேர்ந்து கொள்ளுதல் அல்லது அவற்றை, நியாயப்பிரமாணத்தின் மற்ற அம்சங்களைக் காட்டிலும் குறைவான முக்கியத்துவம் வாய்ந்தவை என்பது போன்று அவற்றைப் புறக்கணித்தல் ஆகியவற்றைச் செய்யக்கூடாதிருந்தது என்றும் அவர் போதித்தார்.

கிறிஸ்தவ போதனையில் கனம் நிறைந்த விஷயங்களைக் கொண்டுள்ளது எது என்பதைத் தீர்மானிக்கும் உரிமையை இயேசு மாத்திரமே கொண்டுள்ளார். தேவன் கட்டளை இட்டுள்ளவற்றை மிகச்சரியாக அப்படியே செய்தல் என்பது மாத்திரமே நமது பணிப்பொறுப்பாக உள்ளது (காண்க: மத்தேயு 7:21-24; 15:9; நடபடிகள் 2:42; எபிரெயர் 5:8, 9; 3 யோவான் 3, 4). தேவன் குறிப்பிட்டுள்ளவற்றை மாத்திரம் பயன்படுத்துதல் மற்றும் தேவன் அங்கீகரித்திராதவற்றைப் பயன்படுத்தாது இருத்தல் என்பதே தேவனுக்கு உண்மையுள்ளவர்களாக இருத்தலாகும். தேவனுடைய தெரிவுக்கு அப்பால் செல்லுதல் என்பது அவரது சித்தத்தை மீறுதலாக உள்ளது (2 யோவான் 9).

பணத்தின் பயன்பாட்டிற்குப் பின்வரும் கூற்றை இயேசுவின் உவமை நடைமுறைப்படுத்தினாலும், அது ஒரு பொதுவான கொள்கையை முன்வைக்கிறது: ‘‘கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான். கொஞ்சத்திலே அநீதியுள்ளவன் அநேகத்திலும் அநீதியுள்ளவனாயிருக்கிறான்’’ (லூக்கா 16:10). நாம்

சிறுவிஷயங்களாகக் கருதுபவற்றிற்கு எவ்வாறு பதில் செயல் செய்கிறோம் என்பது, முக்கியமான கொள்கைகள் குறித்த நமது எண்ணப்போக்கைப் பிரதிபலிக்கிறது.

தேவன் கூறியுள்ளவற்றைச் செய்தல் மற்றும் தேவன் கூறியுள்ளவற்றை மாத்திரம் செய்தல் என்பதே கீழ்ப்படிதலாக உள்ளது. வேறுவிதமாகச் செய்தல் என்பது கீழ்ப்படியாமையாக உள்ளது.

**கேள்வி:** பாடல் புத்தகம் என்பது "இசையாக" இருப்பதில்லையா?

**பதில்:** வாய்ப்பாட்டு மாத்திரமே பாடப்பட வேண்டும் என்று வலியுறுத்தும் குழுக்கள், பாடல் புத்தகங்களை அல்லது இசைத் தாள்களைப் பயன்படுத்தும்போது தங்களுக்குள் வேறுபடுவதாகச் சிலர் கூறுகின்றனர். இசைக்கருவிகளும் பாடல் புத்தகங்களும் சம அளவில் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியவையாக உள்ளன என்பது அவர்களின் சிந்தனையாக இருக்கிறது. பாடல் புத்தகத்தினாலோ அல்லது இசைக்குறிப்பினாலோ எந்த ஒரு இசை ஒலியும் ஏற்படுத்தப் படுவதில்லை என்பதே இங்கு வேறுபாடாக உள்ளது.

ஒரு நபர் பாடத்தொடங்கும்போது அல்லது ஒரு இசைக்கருவி இசைக்கப்படத் தொடங்கும்போது மாத்திரமே நாம் இசை ஒலிகளைக் கேட்கிறோம். பாடல் புத்தகங்களும் இசைக்குறிப்புத் தாள்களும், இசைக்கருவிகளின் அதே வகைப்பாட்டில் இருப்பதில்லை, ஏனெனில் அவைகள், தேவன் அங்கீகரித்துள்ள பாடுதலுக்கு இசை ஒலிகள் எதையும் கூட்டுவதில்லை.

**கேள்வி:** இசைக்கருவிகளைப் பயன்படுத்துவதா இல்லையா என்று தேர்ந்து கொள்ளுதலானது உண்மையில் இரட்சிப்புக்கு ஏதேனும் செய்வதாக இருக்கிறதா?

**பதில்:** ஆராதனையில் இசைக்கருவிகளைப் பயன்படுத்துல் என்பது "இரட்சிப்பு சம்பந்தப்பட்டது அல்ல" என்று கூறுதலானது, இசைக்கருவிகள் புதிய ஏற்பாட்டுப் போதனையினால் நியாயப்படுத்தப்படுவதில்லை என்பதை மறைக்கிறது. அவற்றைப் பயன்படுத்துபவர்கள் இழந்து போகப்படமாட்டார்கள் என்பதே உரிமைகோருதலாக உள்ளது.

''இரட்சிப்பு சம்பந்தப்பட்டது'' என்பது என்னவாக உள்ளது? கிறிஸ்தவராவதற்குரிய தொடக்கக் கேட்புகளே இரட்சிப்புக்கு அவசியமான விஷயங்களாக உள்ளன என்று சிலர் முடிவு செய்கின்றனர். இருப்பினும், பாவத்தில் இருந்து இரட்சிக்கப்படுவதற்கு ஒரு நபரிடத்தில் இயேசு கேட்டுக்கொள்வதை மாத்திரமல்ல, ஆனால் பாவத்திலிருந்து விலகியிருத்தலையும் இரட்சிப்பு உள்ளடக்கி இருக்கிறது. எழுதப்பட்டதன் விரிவளவிற்குப் புறம்பே செயல்படும் "பிரமாணம் இல்லாமை" என்பது பாவமாக உள்ளது (1 கொரிந்தியர் 4:6). இசைக்கருவிகள் புதிய ஏற்பாட்டுப் போதனையில் காணப்பட முடிவதில்லை என்பதால், அவற்றைப் பயன்படுத்துபவர்கள் எழுதப்பட்டதற்கு மிஞ்சியவர்களாக உள்ளனர். அவர்கள் கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருப்பதில்லை (2 யோவான் 9).

தக்க வகையிலான ஆராதனை என்பது இரட்சிப்பு சம்பந்தப்பட்டது என்று இயேசு போதித்தார். அவர், யோவான் 4ம் அதிகாரத்தில், சமாரியப் பெண்ணிடம், "நீங்கள் அறியாததைத் தொழுதுகொள்ளுகிறீர்கள்; நாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுதுகொள்ளுகிறோம்; ஏனென்றால் இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது" என்று கூறினார் (வசனம் 22). தேவன் எருசலேமைத் தேர்ந்து

கொண்டிருந்தார் (1 இராஜாக்கள் 11:13). மறைவான கருத்து தெளிவாக உள்ளது; தேவனுடைய தேர்ந்து கொள்ளுதலைக் கடைப்பிடித்து ஆராதிக்காதவர்கள் இரட்சிக்கப்பட மாட்டார்கள்.

காயீன் மற்றும் ஆபேல் ஆகியோரின் பலிகள் ''இரட்சிப்பு சம்பந்தப்பட்டதாக'' இருந்தன. காயீனின் பலி தேவனைப் பிரியப்படுத்தவில்லை, அதே வேளையில் ஆபேலின் பலி தேவனைப் பிரியப்படுத்திற்று (எபிரெயர் 11:4). காயீன், "பொல்லாங்கனால் உண்டாயிருந்து தன் சகோதரனைக் கொலைசெய்த காயீன் ... தன் கிரியைகள் பொல்லாதவைகளும், தன் சகோதரனுடைய கிரியைகள் நீதியுள்ளவைகளுமாயிருந்தன ..." என்று யோவான் எழுதினார் (1 யோவான் 3:12). இந்த இரு சகோதரர்களின் செயல்பாடுகளுக்கு இடையில் ஒப்பீடு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆபேல் மேன்மையான பலியை அளித்தார், "அதினாலே அவன் நீதிமானென்று சாட்சி பெற்றான்" (எபிரெயர் 11:4). காயீன் தவறான பலியைச் செலுத்தினார், அது அவரது செயல்கள் பொல்லாதவைகளாக இருந்ததைக் காண்பித்தது.

நாதாப் மற்றும் அபியூ ஆகியோரின் மரணங்கள் கூட, தேவனை நாம் ஆராதிக்க நாடுகையில் அவர் கீழ்ப்படிதலை எதிர்பார்க்கிறார் என்பதற்கு ஆதாரம் தருகின்றன. அவர்கள் தேவனுடைய குறிப்புரைகளைப் பின்பற்றுவதற்குப் பதிலாக (லேவியராகமம் 10:1) ஆசரிப்புக்கூடாரத்தில் அந்நிய அக்கினியைக் கொண்டுவந்து அளித்தமைக்கு மிக உயர்ந்த கிரயம் ஒன்றைச் செலுத்தினர். தேவனுக்குக் கீழ்ப்படிதல் என்பது நமது இரட்சிப்பிற்கு மிகவும் இன்றியமையாததாக உள்ளது.

**கேள்வி:** நமது ஆராதனையில் இசைக்கருவிகள் பாடலில் ஒலியை மேம்படுத்தும்போது தேவன் அதில் பிரியப்படுவது இல்லையா?

**பதில்:** நாம் தேவனுக்குக் கீழ்ப்படியும்போது அவர் அதில் பிரியப்படுகிறார். இசைக்கருவிகள் பாடுதலை மேம்படுத்துகின்றன என்ற விவாதத்தை ஏற்றுக்கொள்ளும்போது, நாம் தேவனை ஆராதித்தலில் மனித முன்னுரிமை எதற்குமான வாசலைத் திறந்துவைப்பவர்கள் ஆவோம். பாடகர் குழுவை இயக்குபவர்களில் சிலர், வாய்ப்பாட்டே மிக அழகிய பாடல் எடுத்துரைப்பாக உள்ளது என்ற கருத்தைப் பற்றிக் கொண்டுள்ளனர். இது கருத்தில் முரண்பாடு ஒன்றை உருவாக்குகிறது என்பது தெளிவு. தேவனுடைய முன்னுரிமைகளை விட்டுவிட்டு யாருடையதற்கு கனம் அளிக்கப்பட வேண்டும்?

இந்த விவாதம் அதன் இறுதி முனை வரைக்கும் எடுத்துச் செல்லப்படுமென்றால், கர்த்தருடைய பந்தியானது மாற்றப்படலாகும். ஒரு உலர்ந்த ரொட்டியின் சுவையானது அத்துடன் தேனைச் சேர்ப்பதால் மேம்படுத்தப்படக் கூடும் என்று சிலர் நம்பலாம். ஞானஸ்நானம் என்பது தண்ணீரில் ஒரு நபரை அமிழ்த்தி அவரை நனையும்படி செய்வதற்குப் பதிலாக (காண்க நடபடிகள் 8:38, 39; ரோமர் 6:4; கொலோசெயர் 2:12), அதைப் பெற்றுக்கொள்ளுபவரை ரோஜா இதழ்களுக்குள் அமிழ்த்தும் ஒரு அழகிய சடங்காக்கப்படலாம். தேவனுடைய பூரணத்தன்மையில் நாம் மேம்பாடு செய்யலாம் என்று தவறாக யூகிக்க முடியாது.

**கேள்வி:** இசைக்கருவிகளைப் பயன்படுத்துதல் என்பது, உறுப்பினர் அல்லாதவர்களை ஆராதனை ஊழியத்திற்குக் கவர்ந்து இழுப்பதில்லையா?

**பதில்:** ஒருவேளை, இசைக்கருவிகளின் இசையினால்

பொழுதுபோக்குவதற்காக, வேறு வகையில் ஆராதனை ஊழியத்திற்கு வராத எண்ணற்ற மக்கள் அவ்வாறு வரலாம். இது தேவனை ஆராதிப்பது எவ்வாறு என்பதற்கான நமது தர அளவையாகும் என்றால், எல்லா வகையான பொழுதுபோக்குகளும் ஆராதனை கூடுகைகளில் கூட்டப்படலாமே. தேவனுடன் ஐக்கியம் கொண்டிருக்க விருப்பம் மற்றும் அவரது சித்தத்தின்படி அவரை ஆராதித்தல் ஆகியவற்றின் காரணமாக, ஆராதிப்பவர்கள் *தேவனால்* கவரப்பட வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். நாம் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று அவர் விரும்புகிறார்; பரலோகத்தில் இருப்பவர்கள் கூட அவருடைய சித்தத்தைச் செய்கின்றனர் (மத்தேயு 6:10; 1 பேதுரு 3:22). ஆராதனையில் தேவனுடைய தெரிந்துகொள்ளுதல்களில் திருப்தி அடையாதவர்கள், தேவன் தேர்ந்து கொண்டிராத, தாங்கள் விரும்பித் தேர்ந்துகொண்ட வழிமுறைகளைப் பயன்படுத்தும்போதும்கூட, அவர் பிரியப்படுகிற வகையில் அவரை ஆராதிக்கத் தவறிவிடுகின்றனர்.

**கேள்வி:** இசைக்கருவிகளைப் பயன்படுத்துவதற்கான விருப்பம் என்பது மனித இயல்பில் தேவன் விதைத்த விருப்பமாக இருப்பதில்லையா?

**பதில்:** இசைக்கருவிகள் மனித இயல்பின் ஒரு பாகமாக உள்ளன என்ற முடிவானது, தேவனை ஆராதிப்பது எவ்வாறு என்று முடிவு செய்ய அடிப்படையாக இருப்பதில்லை. நாம் இயல்பாகச் செய்பவற்றினால் ஆராதனை முறைமைகள் கட்டளையிடப்படும் என்றால், மக்களால் மகிழ்ச்சியுடன் அனுபவிக்கப்படுகிற எந்த நடவடிக்கையும் ஆராதனையில் கூட்டப்படக் கூடும். இந்தச் சிந்தனைதான் புறதெய்வ வணக்கத்தில் புலன் இன்ப நடைமுறைகளைத் தோற்றுவித்தது. நமது இயல்பான விருப்பச் சாய்தல்களின் மீது ஆராதனை கட்டியெழுப்பப்படும் என்றால், தேவனுடைய தர அளவைகள் அர்த்தமற்றதாகிவிடும்.

இந்த அணுகுமுறையானது எல்லா வகையான நடைமுறைகளையும் ஆராதனைக்குள் கொண்டு வந்துவிடும். பவுல், "நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல்" என்று வெளிப்படையாக எச்சரித்தார் (எபேசியர் 4:14அ). வேதாகமத்தில் எவ்விடத்திலும், மக்கள் தங்கள் இயல்பான உணர்வுத் தூண்டுதல்களின்படி ஆராதிக்க அழைப்பு விடுப்பதில்லை. ஆராதனையானது நமது திடீர் விருப்ப உணர்வின்படியல்ல ஆனால் தேவனுடைய சித்தத்தின்படியானதாக இருக்க வேண்டும்.

**கேள்வி:** சபையானது நவீன வளர்ச்சிக்கு ஏற்பத் தன்னை வைத்துக்கொள்வது அவசியமில்லையா?

**பதில்:** சமூகத்தின் முன்னேற்றத்திற்கு ஏற்றபடி நம்மை வைத்துக்கொள்வதற்கு இசைக்கருவிகள் அவசியமானவைகளாக உள்ளன என்று சிலர் கருத்துத் தெரிவிக்கின்றனர். சபையின் எதிர்காலமானது அது தன்னைக் காலத்திற்கு ஏற்ப வைத்துக்கொள்ளுதலைச் சார்ந்துள்ளது என்று அவர்கள் நினைக்கின்றனர்.

அப்படிப்பட்ட கருத்தை முன்னேற்றுபவர்கள், சபை தொடங்கியபோது பல்வேறு இசைக்கருவிகள் கிடைக்கப்பட்டு இருந்தன என்ற உண்மையைக் கண்ணோக்காது விடுகின்றனர். இயேசு தமது பின்பற்றாளர்களுக்கு, ஆராதனையில் இசைக்கருவிகளைப் பயன்படுத்த வேண்டும் என்று போதித்திருந்தால்,

தொடக்ককாலக் கிறிஸ்தவர்கள் அவற்றைப் பயன்படுத்தி இருக்க முடியும். கிறிஸ்தவம் தொடங்கிய பகுதியில் மற்ற மதத்தினரால் இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டிருந்தபோதிலும், இவ்விஷயத்தில் புதிய ஏற்பாட்டின் அமைதிநிலையானது, ஆராதனையில் அவற்றின் பயன்பாட்டை இயேசு தேர்ந்துகொள்ளவில்லை என்பதற்குச் சாட்சியமாக இருக்க வேண்டும். அப்போஸ்தலர்கள் சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தப்பட்டிருந்ததால் (யோவான் 16:13), இசைக்கருவிகளைப் பற்றி சத்தியம் ஒன்றும் கூறவில்லை என்பதால் - ஆராதனையில் அவற்றின் பயன்பாட்டை இயேசு விரும்பவில்லை என்றே நாம் முடிவுசெய்தாக வேண்டும்.

கிறிஸ்தவர்கள், காலங்களின் போக்குகளையல்ல, ஆனால் இயேசுவின் போதனையைக் காத்து நடக்க வேண்டிய பொறுப்புக் கொண்டுள்ளனர். சமுதாயத்தின் உணர்வு விருப்பங்களைப் பின்பற்றுவதற்காக, உண்மையான போதனையில் இருந்து மக்கள் விலகிச்செல்வார்கள் என்று பவுல் எச்சரித்தி ருந்தார் (1 தீமோத்தேயு 4:1-3; 2 தீமோத்தேயு 4:2-4).

**கேள்வி:** தொடக்ககால சபைக்கு இசைக்கருவிகள் அறியப்பட்டிருந்தால், அது அவற்றைப் பயன்படுத்தி இருக்காதா?

**பதில்:** தொடக்ககால சபையின் நாட்களில் இசைக்கருவிகள் இல்லாததால் அவைகள் பயன்படுத்தப்பட வில்லை என்று விவாதிப்பவர்கள், இசைக்கருவிகளின் பழமைத்தன்மை பற்றி விழிப்புணர்வு இல்லாதவர்களாக உள்ளனர். அவைகள் பெருவெள்ளத்திற்கு முன்புகூட இருந்தன. ஆதாமில் இருந்து ஏழாம் தலைமுறையினரான யூபால் என்பவர், "கின்னரக்காரர் நாகசுரக்காரர் யாவருக்கும் தகப்பனானார்" (ஆதியாகமம் 4:19-21). கிறிஸ்துவுக்கு ஏறக்குறைய 1900 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்திருந்த லாபான், யாக்கோபு திருட்டளவாய்ப் புறப்பட்டுச் செல்லாது இருந்திருந்தால், அவரைத் தாம் "சந்தோஷமாய், சங்கீதம் மேளதாளம் கின்னரமுழக்கத்துடனே அனுப்புவேனே" என்று கூறினார் (ஆதியாகமம் 31:27).

முதல் நூற்றாண்டின்போது, உலக நடவடிக்கைகளிலும் புறதெய்வ வணக்கத்திலும், இசைக் கருவிகள் பரவலாக அறியப்பட்டும் பயன்படுத்தப்பட்டும் இருந்தன. அவற்றைப் பயன்படுத்துவதை சபையானது அங்கீகரித்து இருந்தால் அவை அங்கும் கிடைக்கப் பெற்றிருக்கும்.

**கேள்வி:** "பாடுதல்" (*psallo*) என்ற வார்த்தையில் இசைக்கருவியின் பயன்பாடு மறைமுகமாக உணர்த்தப்படுவதில்லையா?

**பதில்:** *Psallo* என்பது "பாடுதல்" என்று மாத்திரமே அர்த்தப்படுகிறது. "பாடுதல்" என்ற வார்த்தை இசைக்கருவி ஒன்றை மறைமுகமாக உணர்த்துகிறது என்று சிலர் விவாதிக்கின்றனர். அவர்களின் வாதம் பின்வருவது போன்று செல்லுகிறது: இசைக்குழுவினருடன் உள்ள தனிப்பாடகர் ஒருவர், உங்களுக்காக நான் ஒரு பாடல் பாடப்போகிறேன் என்று கூறினால், அவர் பின்னணியில் இசைக்கருவிகளின் வாசிப்புடன் தாம் பாடப்போவதாக அர்த்தப்படுத்துகிறார். தனிப்பாடகர் செய்கிற விஷயத்திற்கு இது ஒரு சரியான விவரிப்பாக உள்ளது, ஆனால் இசைக்குழுவின் உறுப்பினர்கள் என்ன செய்கின்றனர்? அந்த நிகழ்ச்சியைக் காணுபவர் ஒருவர், ஒரு நபர் பாடும் வேளையில் மற்றவர்கள் இசைக்கருவிகளை இசைக்கின்றனர் என்று கூறமுடியும்.

கர்த்தருடைய இராப்போஜனம் பற்றி இதேவகையான விவாதம்

ஏற்படுத்தப்பட முடியும். பல ஆண்டுகளுக்கு முன்பு, கானடா நாட்டில் ஒரு முகாம் குழு இருந்தது. அவர்கள் திகைப்படையும்படி, அந்த நகரில் இருந்த கானடா நாட்டவர்கள், ரொட்டியானது வெண்ணெயுடன் பரிமாறப்பட வேண்டும் என்று நினைத்ததால், அந்த முகாம் குழுவினரின் உணவிற்கான ரொட்டிகள் அனைத்தும் வெண்ணெய் தடவப்பட்டிருந்தன. கர்த்தருடைய பந்தியின் அப்பத்திற்கு வெண்ணெய் தடவுவது சரியானதாக உள்ளதா? வெண்ணெய் இல்லா அப்பம் என்பது கேள்விப்படாத ஒன்றாக இருந்தாலும், அப்பம் என்பது வெண்ணெயை மறைமுகமாக உணர்த்துவதில்லை, அதேபோன்றே "பாடுதல்" என்பது இசைக்கருவியை மறைமுகமாக உணர்த்துவதில்லை.

கிறிஸ்தவ யுகத்தில் ஆராதனையில், பாடுதல் என்பதே தேவனுடைய அறிவுறுத்துதலாக உள்ளது. "பாடுதல்" என்பது இசைக்கருவிகளை மறைமுகமாக உணர்த்தும் என்றால், அவைகள் பயன்படுத்தப்பட வேண்டும் என்று தேவன் தாவீது மற்றும் நாத்தான் ஆகியோருக்கு வெளிப்படுத்தத் தேவை இருந்திருக்காதே. இசைக்கருவிகளின் பயன்பாட்டைத் தேவன் குறிப்பிடும் வரையிலும், இஸ்ரவேல் மக்களினம் தங்கள் ஆராதனையில் இசைக்கருவிகளை உள்ளடக்கவில்லை. கிறிஸ்தவர்கள் ஆராதனையில் இசைக்கருவிகளைப் பயன்படுத்த வேண்டும் என்று தேவன் விரும்பியிருந்தால், அவற்றின் பயன்பாட்டிற்கு அவர் நமக்கு ஒரு கட்டளையையோ அல்லது ஒரு உதாரணத்தையோ கொடுத்திருப்பாரே.

***கேள்வி:*** இல்லத்தில் இசைக்கருவிகளைப் பயன்படுத்துதல் தவறில்லை என்றால், ஆராதனையில் அவற்றைப் பயன்படுத்துதல் ஏற்றுக்கொள்ளப் படத்தக்கதாக இருப்பதில்லையா?

***பதில்:*** இப்படிப்பட்ட தர்க்கமானது இல்லத்தில் பயன்படுத்தப்படும் எல்லாவற்றையும் சபை ஆராதனைக்குள் கொண்டுவரும். இல்லத்தில் பலவகையான உணவுகள் உட்கொள்ளப்படுகின்றன, ஆனால் அப்பமும் திராட்சரசமும் மாத்திரமே கர்த்தருடைய பந்தியில் பயன்படுத்தும்படி இயேசுவினால் தேர்ந்துகொள்ளப்பட்டன. குடும்பங்கள் உலகப்பிரகாரமான இசையைக் கேட்கின்றனர் மற்றும் பல நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர், அவை குடும்ப ஆராதனை அல்லது கிறிஸ்தவ சபைக்கூடுகைகளில் ஏற்புடையதாக இராது.

தேவன் இஸ்ரவேல் மக்களிடத்தில் எதிர்பார்த்தது போன்றே, கிறிஸ்தவர்களிடத்திலும், பரிசுத்தமுள்ளதற்கும் தீட்டுள்ளதற்கும் இடையில் வேறுபாட்டை ஏற்படுத்தும்படி எதிர்பார்க்கிறார். ஆராதனைக்குத் தேவன் தேர்ந்துகொண்டுள்ளது அவரது பார்வையில் பரிசுத்தமானதாக உள்ளது; வேறுவிதமான நடைமுறையானது சபைகூடுகைகளில் தீட்டுள்ளதாக இருக்கும்.

ஆசாரியர்கள் மார்க்கரீதியான நடபடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும்போது, ''பரிசுத்தமுள்ளதற்கும் பரிசுத்தமில்லாததற்கும், தீட்டுள்ளதற்கும் தீட்டில்லாததற்கும், வித்தியாசம் பண்ணும்படிக்கும்," திராட்ச ரசமோ அல்லது மற்ற போதை தரும் பானமோ குடிக்கக்கூடாதிருந்தது (லேவியராகமம் 10:10; காண்க 21:12). நாதாப் மற்றும் அபியூ ஆகியோர் தூப மேடையில் பயன்படுத்தக் "கட்டளையிடப்பட்டிராத அந்நிய அக்கினியை" கொண்டுவந்ததால் பரிசுத்த ஸ்தலத்தைத் தீட்டுப்படுத்தினர் (லேவியராகமம் 10:1-3).

*ஆசாரியர்கள் "அசுத்தமுள்ளதற்கும் அசுத்தமில்லாததற்கும் உண்டான வேற்றுமையைக் காண்பியாமலும் இருந்த" காரணத்தினால் (எசேக்கியல் 22:26ஆ) அவர்கள் பரிசுத்த பொருட்களைத் தீட்டுப்படுத்தினர் என்று தேவன் எசேக்கியேலின் மூலமாக ஆசாரியர்களைக் குற்றப்படுத்தினார். ஆசாரியர்கள் "பரிசுத்தமானதற்கும் பரிசுத்தமல்லாததற்கும், ... இருக்கும் வித்தியாசத்தை" மக்களுக்குப் போதிக்க வேண்டியவர்களாக இருந்தனர் (எசேக்கியல் 44:23அ). ஆசாரியர்களின் ஊழியத்திற்கென்று தேவன் தேர்ந்து கொண்டது எதுவோ, அது பரிசுத்தமானது என்று மதிக்கப்பட வேண்டியிருந்தது. அவர் தேர்ந்துகொள்ளாதது எதுவோ, அது ஆசாரியர்களால் ஆராதனைக்குள் கொண்டுவரப்பட்டால், அது தீட்டானது என்று கருதப்பட வேண்டியிருந்தது. அங்கீகாரமற்ற நடைமுறைகள் ஆராதனையைத் தீட்டுப்படுத்துகின்றன.*

ஓவன் D. ஆல்பிரிக்ட்

---

குறிப்பு

[1]H. M. Best and D. Huttar, "Music, Musical Instruments," *The Zondervan Pictorial Encyclopedia of the Bible,* ed. Merrill C. Tenney (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1975), 4:319.